பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 02 செவ்வாய்க்கிழமை 17.12.2024 கதிர் 040

## இது ரகசியம் அல்ல!

”நாய்களை விரட்டிவிட்டோம். அவை எங்கோ ஓடிவிட்டன. ஆனால் அந்தநாய்களில்இருந்தஉண்ணிகள் எல்லா இடங்களிலும் உள்ளன. அவைஅழியவில்லை.நாய்கள் ☞2

# இரண்டு சட்டத்தரணிகள் துணையுடன் நாமல் சட்டமானிப் பரீட்சை எழுதினார்

### விசாரியுங்கள் என்று சிஐடியிடம் முறைப்பாடு

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்றஉறுப்பினர்நாமல்ராஜபக்ச பிரத்தியேக குளிர் அறையில் இரண்டு சட்டத்தரணிகளின் ஒத்துழைப்புடன் சட்டமாணி பரீட்சை எழுதினார் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் (சிஐடி) முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது. இது குறித்து முறையான விசாரணைகளை மேற்கொண்டு நாமல் ராஜபக்சவின் சட்டமாணிப் பட்டத்தை இரத்துச் செய்து முறைகேடான செயற்பாட்டுக்கு ஒத்தாசையளித்த அரச அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்துகிறார் என்று இலஞ்ச, ஊழலுக்கு எதிரான மக்கள்அமைப்பின்தலைவர்ஜாமுனி காமந்த துஷாரா தெரிவித்தார்.

நாமல்ராஜபக்சவின்சட்டமாணி பட்டம்தொடர்பில்குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் நேற்று முறைப்பாடளித்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவித்ததாவது:

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச 11 ஆண்டுகளுக்கு முன்னர் சட்டமாணிப் பரீட்சைக்குத் தோற்றிய விவகாரம் இன்றுவரை பேசப்படுகிறது. அவர்முறையற்றவகையில்பரீட்சைக்குத் தோற்றினார் எனவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின்கல்வித் தகைமை தற்போது பிரதான பேசுபொருளாக காணப்படுகின்ற நிலையில் வெளிநாட்டில் இருந்து இலங்கையர் ஒருவர் நாமல் ராஜபக்சவின் ☞2

## வவுனியாவிலும் எலிக் காய்ச்சல்

யாழ்ப்பாணத்தில் எலிக் காய்ச்சல் பரவி வரும் நிலையில் வவுனியாவிலும் ஒருவருக்கு எலிக் காய்ச்சல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதையடுத்து அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக நேற்று மாற்றப்பட்டார்.

வவுனியா, தாலிக்குளம் ☞8

## ஏனைய கட்சிகளையும் கேட்டே சபாநாயகர் பதவிக்குப் போட்டி

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

சபாநாயகர் பதவிக்கு எதிர்க்கட்சியில் இருந்து ஒருவரை நிறுத்துவதா வேண்டாமா என்பது தொடர்பில் எதிர்க்கட்சியாக ஏனைய தரப்பினர்களுடன் கலந்துரையாடி முடிவை எட்டுவோம். இது தொடர்பாக ஏனைய கட்சிகளுடனும் பேச்சு நடத்தி தீர்மானத்துக்கு வருவோம். நாடாளுமன்ற உறுப்பினர்களின்கருத்துக்களுக்குசெவிசாய்த்துஅவர்களுக்கு மதிப்பளித்து ஒன்றிணைந்து செயற்படுவோம் என ☞2

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் ☞2

## பிரதி சபாநாயகர் றிஸ்வியின் மருத்துவ பட்டமும் சர்சையில்

சபாநாயகர் ரன்வலவின் கல்வித் தகைமை தொடர்பில் எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அவர் பதவி விலகியதைத் தொடர்ந்து பிரதி சபாநாயகர் பயன்படுத்திவரும் பட்டம் தொடர்பிலும் சர்ச்சை எழுந்துள்ளது.

பிரதி சபாநாயகர் பயன்படுத்திவரும் 'விசேட வைத்திய நிபுணர்' என்ற பட்டத்தை அவர் இலங்கையில் பயன்படுத்த முடியாது, அதற்கு உரிய முறையில் அவர் அனுமதி பெறவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின்பண்டார தெரிவித்தார்.

# தமிழரின் அபிலாஷைகளை இலங்கை நிறைவேற்றுமென இந்தியா நம்பிக்கை

### கூட்டுச் செய்தியாளர்கள் சந்திப்பில் மோடி தெரிவிப்பு
### மாகாண சபை தேர்தலை நடத்தவும் கோரிக்கை

**தமிழ் மக்களின் அபிலாஷைகளை இலங்கை ஆளும்தரப்பு நிறைவேற்றுமென நாம் நம்புகின்றோம். அத்துடன் இலங்கைஅரசமைப்பினைமுழுமையாக அமுல்படுத்தவும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்குமான தமது உறுதிமொழியினை இலங்கை நிறைவேற்ற வேண்டும் என இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.**

**இந்தியாவில் 3 நாள்கள் பயணம் மேற்கொண்ட அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் இந்தியப் பிரதமர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:**

**அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவை இந்தியாவுக்கு அன்புடன் வரவேற்கின்றேன். அரசுத் தலைவராக இந்தியாவுக்கு உங்கள் முதல்பயணத்தைமேற்கொள்ளநீங்கள் எடுத்த தீர்மானம் குறித்து நான்** ☞2

## இந்திய வர்த்தகர்களுடன் அநுர நேற்றுச் சந்திப்பு

### முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஆராய்வு






மூன்று நாள் பயணமாக இந்தியா சென்றிருக்கும் அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க அங்குள்ள முன்னணி வர்த்தகப் பிரமுகர்களை நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச்சந்திப்புத்தொடர்பில்அரசுத்தலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளதாவது:

இந்திய கைத்தொழில் சம்மேளத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் இந்தியாவின் முன்னணி தொழில் முனைவோர் கலந்துகொண்டனர்.

இலங்கையில் முதலீடு செய்வதற்குச் ☞8

## அரசியல் தீர்வு குறித்து அநுர டில்லியில் மூச்சுவிடவில்லை

### மாகாண சபைகள் குறித்தும் பேசவில்லை

இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வு குறித்து அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க இந்தியாவில் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. தமிழர்களின் அபிலாஷைகளை இலங்கை அரசு நிறைவேற்றும் என்று இந்தியா நம்புகிறது என்றும் அரசமைப்பை முழுமையாக நிறைவேற்றி மாகாண சபைத் தேர்தல்களை நடத்தவேண்டும் என்று இந்தியா கோரிக்கை முன்வைத்தார் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கூ-ட்டுச் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்தபோதும், அவை பற்றி அரசுத் தலைவர் எந்தக் கருத்தையும் வெளிப்படுத்தவில்லை.

அவர் கூட்டுச் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது:

இலங்கையின் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் எனது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக புதுடெல்லிக்கு வருகை தருவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

எனக்கு விடுக்கப்பட்ட அழைப்பிற்காகவும், அன்பான வரவேற்புமற்றும்விருந்தோம்பலுக்கும் இந்திய அரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களுக்கும், மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரு நாடுகளுக்கும் இடையே ஆழமாக வேரூன்றிய நாகரீக உறவுகளையும் வலுவான இருதரப்பு ஒத்துழைப்பையும் மேம்படுத்த இந்தப் பயணம் உதவியது.

ஜனநாயக ரீதியில் நிறுவப்பட்ட தேர்தல் முறைகள் மூலம் இரு நாட்டு மக்களும் தங்கள் கருத்துக்களைத் தெளிவாகவெளிப்படுத்தியுள்ளனர்.இந்தப் பின்னணி மற்றும் நிலையான ☞2

## இந்தியா – இலங்கை இடையே இரு ஒப்பந்தங்கள் கைச்சாத்து

இரட்டைவரிவிதிப்பைத்தடுப்பது மற்றும் அரசு அதிகாரிகளின் திறன் மேம்பாடு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இந்திய - இலங்கை தலைவர்கள் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டன.

மூன்று நாள் உத்தியோகபூர்வப் பயணமாக இந்தியா சென்றுள்ள அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவிற்கும் ☞8

# பிணைமுறி மறுசீரமைப்பு ரணிலின் திட்ட தொடர்ச்சி

### ஆளும் தரப்பு மீது முன்னிலை சோசலிச கட்சி சாடல்

சர்வதேச இறையாண்மைப் பிணைமுறிப்பத்திரமறுசீரமைப்பு உடன்படிக்கை முன்னாள் ஜனாதிபதி ரணிலின் வேலைத் திட்டத்தின் தொடர்ச்சியை முன்னெடுப்பதாக உள்ளதென்று முன்னிலை சோசலிசக் கட்சி தெரிவித்துள்ளது.

அக்கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சர்வதேச இறையாண்மை பத்திரங்களின் மறுசீரமைப்பை இலங்கை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதாக நிதி அமைச்சு டிசெம்பர் 14 அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. 98 சதவீதமான சர்வதேச இறையாண்மைப் பத்திரம் வைத்திருப்பவர்கள் பத்திரப் பரிமாற்றத்தில் விருப்பம் தெரிவித்துள்ளனர் எனவும், எதிர்காலத்தில் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஓடிவிட்டதனால் உண்ணிகள் அகன்றுவிடும் என்றில்லை.”

இப்படிச் சொல்லியிருப்பவர் ஆச்சரியத்துக்குரிய வகையில் நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார. தமக்கு முன்னர் ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்களையும் அரச அதிகாரிகள் பணியாளர்களையுமே அவர் இவ்வாறு நாய்களுக்கும் உண்ணிகளுக்கும் ஒப்பிட்டுப் பேசினார் என்று எடுத்துக்கொள்ள முடிகின்றது.

நீதி அமைச்சர் தொடர்பான விவரங்கள் நாடாளுமன்ற இணையத் தளத்தில் பதவேற்றப்பட்டபோது அவரது பெயருக்கு முன்பாகக் கலாநிதி என்று போடப்பட்டிருந்தது. சபாநாயகரின் 'கலாநிதி' பட்டச் சர்ச்சை பூதாகாரமாக வெடித்ததை அடுத்து, தனது பெயருக்கு முன்பாகவும் கலாநிதி என்று தவறாகக் குறிப்பிடப்பட்டிருப்பதைப் பார்த்த நீதி அமைச்சர் பதறிப்போய் அதிகாரிகளிடம் அந்தத் தவறைச் சுட்டிக்காட்டினார். உடனடியாக நாடாளுமன்ற இணையத்தளத்திலிருந்து அவரது பெயருக்கு முன்பான கலாநிதிப் பட்டம் நீக்கப்பட்டது.

எதிர்க் கட்சியினர் இதனைச் சிக்கெனப் பற்றிக்கொண்டனர். நீதி அமைச்சரும் தனது கல்வித் தகைமை ஏமாற்றுகின்றார் என்கிற வகையில் கண்டனங்கள் எழுந்தன. அதை அடுத்து நிலமையைத் தெளிவுபடுத்திய நாடாளுமன்றப் பணியகம், தவறுதலாகவே இணையத்தில் நீதி அமைச்சரின் பெயரின் முன்பாக கலாநிதி என்று பதிவேற்றப்பட்டுவிட்டது என்று விளக்கமளித்தது.

அந்த விளக்கமும் போதாது என்று கருதிய நீதி அமைச்சர் நேற்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குச் சென்று இது பற்றி முறைப்பாடளித்தார். தனது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தவேண்டும் என்ற திட்டமிட்ட நோக்கத்துடனேயே இவ்வாறு தவறான தகவல் பதியப்பட்டதா என்பது தொடர்பில் விசாரணை நடத்துமாறு அவர் முறைப்பாடு செய்தார்.

தனது முறைப்பாட்டைப் பதிவு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் நாய், உண்ணி போன்ற உதாரணங்களைப் பயன்படுத்தினார்.

எமது எதிர்ப் புரட்சியின் காரணமாக ராஜபக்சவாக இருந்தாலும் ரணிலாக இருந்தாலும் 70 வருட ஊழல்வாதிகள் தப்பித்துவிட்டார்கள். ஊழல்வாதிகள் ஓடிய பிறகும் அவர்களின் எச்ச சொச்சங்கள் இருக்கத்தனர் செய்கின்றன.

இப்போது நாய் எங்கோ கிடக்கிறது. நாயை விரட்டினோம். ஆனால் உண்ணிகள் எல்லா இடங்களிலும் உள்ளன. அவை அழிவதில்லை. நாய் போனாலும் அவை அப்படியே இருக்கின்றன. அதுமட்டுமின்றி, குத்துவிளக்கு அந்த உண்ணிகள் பளிச்சென்று தெரிவதில்லை. அதனாலேயே அவற்றை ஒவ்வொன்றாக ஆய்வு செய்ய வேண்டியிருக்கின்றது. அந்த பிழைகளை அரசு அமைப்பிலிருந்து அகற்றுவதற்கான செயல்முறையை மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால், நாய் குதித்து ஓடிவிட்டதால் மட்டும் அந்த இடத்திலிருந்து உண்ணிகளும் சென்றுவிட்டதாக அர்த்தமாகாது என்றார் அமைச்சர்.

அவர் இப்படி அமைச்சர்களையும் அரச பணியாளர்களையும் நாய்களுக்கும் உண்ணிகளுக்கும் ஒப்பிடிருப்பது கொஞ்சம் 'டூ மச்' என்றுதான் எனக்குப் படுகின்றது. இது புதிய சர்ச்சைகளுக்கும் கருத்து வெடிப்புக்களுக்கும் வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழரின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தப் பயணம் நமது உறவுகளில் புத்துணர்ச்சியுடனான ஆற்றல்களையும் சக்தியினையும் உட்புகுத்தியுள்ளது.

நமது பங்குடைமைக்கான எதிர்கால நோக்கினை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். அத்துடன் நமது பொருளாதார பங்குடைமையில் முதலீட்டினை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சி மற்றும் இணைப்புக்கு நாங்கள் முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். நேரடியான தொடர்புகள், டிஜிட்டல் மற்றும் ஆற்றல் அடிப்படையிலான இணைப்பு ஆகியவை எங்கள் கூட்டாண்மையின் முக்கிய தூண்களாக இருக்கவேண்டுமென நாம் தீர்மானித்துள்ளோம்.

இருநாடுகளுக்கும் இடையிலான மின்சார வலையமைப்பிற்கான இணைப்பு மற்றும் பல்பொருள் பெற்றோலிய உற்பத்திகளை விநியோகிக்கும் குழாய் கட்டமைப்பு ஆகியவற்றை உருவாக்குவதற்காகவும் நாம் பணியாற்றவுள்ளோம்.

சம்பூர் சூரியக் கல மின்சக்தி திட்டம் துரிதப்படுத்தப்படும். இவற்றுக்கு மேலதிகமாக இலங்கையில் உள்ள மின் உற்பத்தி நிலையங்களுக்கு எல்.என்.ஜி. (ஸிஹிறூ) வழங்கப்படும்.

இருதரப்பு வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக ஈரிசிஏ (சிவீளீபு) உடன்படிக்கையினை நிறைவேற்றும் முயற்சிகள் இருதரப்பாலும் மேற்கொள்ளப்படும்.

இன்றுவரை 5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியிலான நன்கொடை மற்றும் கடனுதவி இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களுக்கும் நாங்கள் ஆதரவினை வழங்கி வருகின்றோம். எமது பங்காளி நாடுகளின் அபிவிருத்தித் தெரிவுகளுக்கு அமைவாகவே எமது திட்டங்கள் தெரிவு செய்யப்படுகின்றன.

இந்த ஆதரவினைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் வகையில், மாகோ முதல் அனுராதபுரம் வரையிலான தொடருந்துப் பாதை சமிக்கைகள் மற்றும் காங்கேசன்துறை துறைமுக மீளமைப்புக்காக நன்கொடை அடிப்படையிலான ஆதரவினை வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் எமது கல்வி ரீதியான ஒத்துழைப்பின் அங்கமாக இலங்கையில் உள்ள கிழக்கு பல்கலைக் கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு நாம் மாதாந்த புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளோம்.

அடுத்துவரும் ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் இலங்கையைச் சேர்ந்த 1500 சிவில் சேவை அதிகாரிகளுக்கு இந்தியாவில் பயிற்சிகள் வழங்கப்படும்.

வீடமைப்புத் திட்டம், புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் உட்கட்டமைப்பு சார்ந்த திட்டங்களுடன் இலங்கையின் விவசாயம் பால்பொருள் உற்பத்தி மற்றும் மீன்பிடி ஆகிய துறைகளுக்கும் இந்தியா தனது ஆதரவை வழங்கும்.

இலங்கையின் பிரத்தியேக டிஜிட்டல் அடையாள அட்டை திட்டத்தில் இந்தியா பங்காளராக இருக்கும். எமது பாதுகாப்பு ஒன்றுடனொன்று இணைக்கப்பட்டுள்ளது என்பதில் அரசுத் தலைவர் திசாநாயக்காவும் நானும் முழுமையான இணக்கப்பாட்டினைக் கொண்டிருக்கின்றோம்.

பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையினை துரிதமாக நிறைவேற்றவேண்டுமென நாம் தீர்மானித்துள்ளோம். அத்துடன் நீரியல் சார்ந்த துறைகளிலும் ஒத்துழைப்புடன் செயற்பட நாம் இணங்கியுள்ளோம்.

பிராந்தியத்தின் சமாதானம், பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்கு கொழும்பு பாதுகாப்பு குழுமம் மிகவும் முக்கியமான தளம் என நாம் நம்புகின்றோம். இவ்வாறான குடையின் கீழ், கடல்சார் பாதுகாப்பு, பயங்கரவாத ஒழிப்பு, இணையப் பாதுகாப்பு, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் கடத்தல்களுக்கு எதிரான போராட்டங்கள், மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் உதவி ஆகிய விடயங்களிலும் ஆதரவு வழங்கப்படும்.

இந்திய - இலங்கை மக்களிடையில் காணப்படும் உறவுகள் நமது நாகரிகங்களில் வேரூன்றியவை ஆகும். பாளி மொழியினை செம்மொழியாக அறிவித்த தருணத்திலும் அதனுடன் இணைந்த கொண்டாட்டங்களிலும் இலங்கையும் எம்முடன் இணைந்திருந்தது.

கப்பல் சேவைகளும், சென்னை யாழ்ப்பாண விமான இணைப்புகளும் சுற்றுலாத்துறையினை மாத்திரம் மேம்படுத்தவில்லை, கலாசார உறவுகளையும் வலுவாக்கியுள்ளன.

நாகபட்டினம் மற்றும் காங்கேசன் துறைக்கு இடையிலான கப்பல் சேவை வெற்றிகரமாக மீள ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நிலையில் இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் இடையிலான கப்பல் சேவையினையும் ஆரம்பிக்க நாங்கள் கூட்டாகத் தீர்மானித்துள்ளோம்.

பௌத்த மத வளாகம் மற்றும் இலங்கையின் இராமாயணச் சுவடுகள் மூலம் சுற்றுலாத்துறையில் காணப்படும் மகத்தான ஆற்றலை உணர்ந்துகொள்வதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

நமது மீனவர்களின் வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்து விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த விவகாரம் தொடர்பாக மனிதாபிமான ரீதியிலான அணுகுமுறையினை கடைப்பிடிக்க வேண்டுமென நாம் இருவரும் இணங்கியுள்ளோம்.

அத்துடன் இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் புனரமைப்பு குறித்தும் நாம் கலந்துரையாடியுள்ளோம். அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அனைவரையும் உள்ளடக்கிய தனது நோக்கு குறித்து என்னிடம் கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை இலங்கை ஆளும்தரப்பு நிறைவேற்றுமென நாம் நம்புகின்றோம். அத்துடன் இலங்கை அரசமைப்பினை முழுமையாக அமுல்படுத்தவும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்குமான தமது உறுதிமொழியினை அவர்கள் நிறைவேற்ற வேண்டும்.

தேசத்தைக் கட்டியெழுப்பும் அவரது முயற்சிகளில் இந்தியா உண்மையானதும் நம்பத்தகுந்ததுமான பங்காளியாக இருக்குமென நான் அரசுத் தலைவர் அநுர குமார திசநாயக்கவிடம் உறுதியளித்துள்ளேன் - என்றார்.

## இரண்டு ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமாணி பட்டத்தை சவாலுக்குட்படுத்தியுள்ளார்.

11 ஆண்டுகளுக்கு முன்னர் சட்டமாணி பரீட்சையின்போது பிரத்தியேக குளிர் அறையில் இருந்தவாறு நாமல் ராஜபக்ச பரீட்சைக்குத் தோற்றினார் என்று குறித்த நபர் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரிக்குத்தான் முறைப்பாடளித்தார் எனவும், அதனை அவர் கண்டுகொள்ளவில்லை என்றும் அதனைத் தொடர்ந்து சட்டக்கல்லூரி அதிபரிடம் அதுபற்றி முறையிடச் சென்றபோது அவர் இருக்கவில்லை என்றும் கல்லூரியின் பதிவாளரிடம் முறையிட்டபோதும் அவரும் அந்த முறைப்பாட்டை கவனத்திற் கொள்ளவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அப்போதைய நீதியமைச்சின் செயலாளர் சுஹத் கம்லத்திடம் குறிப்பிட்டபோதும் அவர் அந்த முறைப்பாட்டை எழுத்துமூலமாகப் பெற்றுக் கொள்ளவில்லை என்றும், அதன் பின்னர் இவ்விடயம் குறித்து கொழும்பு வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடளிக்க சென்றபோது அங்கும் அவர்களும் முறைப்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் அந்த நபர் குறிப்பிட்டுள்ளார்.

2010.12.03 அன்று பொலிஸ் மா அதிபரை சந்தித்து முறைப்பாடளிக்க முயற்சித்தார் எனவும், அதுவும் பயனலிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடளிப்பதற்கு சென்ற வேளை பெரிய மீன்கள் சிறிய மீன்களை விழுங்குவது இயல்பானது என்று அதிகாரிகள் குறிப்பிட்டனர் என்று அந்த நபர் தெரிவித்துள்ளார். முறைப்பாடளிக்க முயற்சித்ததால் தனக்கு உயிரச்சுறுத்தல் ஏற்பட்டதாகவும் அதனால் தான் நாட்டை விட்டு வெளியேறினார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

திருடர்களைப் பிடிப்பதாக குறிப்பிட்டுக் கொண்டே இந்த ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தது. இந்த ஆளும்தரப்பை திருடர்கள் பிடித்தார்களா அல்லது திருடர்களை ஆளும்தரப்பு பிடித்ததா என்ற சந்தேகம் இப்போது காணப்படுகிறது. நாமல் ராஜபக்ச பிரத்தியேக குளிர் அறையில் இரண்டு சட்டத்தரணிகளின் ஒத்துழைப்புடன் சட்டமாணி பரீட்சை எழுதினார் என்ற குற்றச்சாட்டு ஆதாரபூர்வமாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்விவகாரம் குறித்து முறையான விசாரணைகளை மேற்கொண்டு நாமல் ராஜபக்சவின் சட்டமாணி பட்டத்தை இரத்துச் செய்து முறைகேடான செயற்பாட்டுக்கு ஒத்தாசை அளித்த அரச அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்துகிறேன் - என்றார்.

## ஏனைய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

சபாநாயகர் பதவிக்கான போட்டியில் எதிர்க் கட்சி சார்பில் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் எமக்கு பல்வேறு முன்மொழிவுகளும் கருத்துக்களும் காணப்படுகின்றன. எதிர்க்கட்சியில் பல கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. அவர்களுடனும் இது தொடர்பில் கலந்துரையாடி அவர்களது நிலைப்பாடுகளை தெரிந்து கொள்வதும் இங்கு முக்கியமாகும். தகுதிகளை தவறான முறையில் முன்வைத்து மக்களை தவறாக வழிநடத்துவதும் தவறுதான் - என்றார் அவர்.

## பிரதி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதி சபாநாயகர் றிஸ்வி சாலி தன்னை விசேட வைத்திய நிபுணர் என்று அடையாளப் படுத்தியுள்ளார். உண்மையில் அவர் வெளிநாட்டில் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்து விசேட வைத்திய நிபுணராக இருந்தாலும் இலங்கையின் மருத்துவக் கட்டளைச் சட்டங்களுக்கு உட்பட்டவராக இருந்தால் மட்டுமே அவரை அவ்வாறு அழைக்க முடியும்.

இலங்கையில் அவர் விசேட வைத்திய நிபுணருக்கான அறிவியல் பரீட்சையில் சித்தியடைந்து அதற்கான அங்கீகாரத்தினை பதிவு செய்து பெற்றிருக்கவேண்டும். ஆனால் அவ்விதமான எந்தப் பதிவுகளும் காணப்படவில்லை. ஆகவே அது தொடர்பில் நாம் முறைப்பாடுகளை மேற்கொள்ள தயாராகி உள்ளோம்.

அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதேநேரம், அவர் பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து விலகவேண்டும். அதுவரையில் அவரை வைத்திய நிபுணர் என்று அழைக்காது இருப்போம் என்றார்.

## அரசியல்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி, சமூக வலுவூட்டல் மற்றும் பௌதீகப்பாதையின் ஊடாக இருநாடுகளையும் வழிநடத்துவதற்கு மக்கள் வழங்கியுள்ள ஆணை என்பன இரு நாடுகளின் அரசியல் சூழலின் முக்கிய மைல்கல்லாக உள்ளது. இந்த நிலையிலே எனது இந்தப் பயணம் அமைந்துள்ளது.

ஒரே மக்கள் ஆணையின் கீழ் இதுவரை தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகஎண்ணிக்கையிலான பிரதிநிதிகளைக் கொண்ட நாடாளுமன்றமாக இலங்கைப் நாடாளுமன்றம் தற்போது மாறியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு இலங்கை மக்களிடமிருந்து கிடைத்த இந்த மகத்தான ஆதரவு இலங்கை வரலாற்றில் ஒருபோதுமில்லாத வரலாற்றுத் தருணமாகும். இலங்கை வரலாற்றில் முதன்முறையாக அண்மையில் நடந்து முடிந்த அரசுத் தலைவர் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் ஒருபோதுமில்லாதவாறு வெளிப்படுத்தப்பட்ட மக்கள் ஆணை, எமது நாட்டில் புதிய அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்பக்கூடிய அரசியல் மாற்றத்திற்கான விதைகளை விதைத்துள்ளது. வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய திசைகளில் அமைந்துள்ள அனைத்து மாகாணங்களிலும் உள்ள பல்வேறு சமூகங்கள் மற்றும் பல்வேறு தரப்பு மக்களும் இந்த மக்கள் ஆணைக்கு பங்களித்தனர்.

எனது மக்கள் இத்தகைய முக்கியமான பொறுப்பை ஒப்படைத்த ஒரு தலைவர் என்ற வகையில், ஜனநாயகத்தின் நோக்கம் பல்வேறு அரசியல் கருத்துக்கள் மற்றும் குழுக்களின் சகவாழ்வில் உள்ளது என்பதை நான் தெளிவாக புரிந்துகொள்கிறேன்.

தர்மபோதனைகளைப் பகிர்ந்துகொள்வது முதல் எமது அபிவிருத்தி முன்னேற்றத்தின் ஓர் அங்கமாக இருப்பது வரை இந்தியா எப்போதுமே இலங்கையின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியின் ஒரு கட்டாய அங்கமாக இருந்து வருகிறது.

எனது இன்றைய இந்தியப் பயணம், நீண்டகாலம் தொட்டு நாம் அனுபவித்து வரும் இந்த நெருங்கிய நட்புறவின் வெளிப்பாடாகும்.

சிறிது நேரத்திற்கு முன்பு, பிரதமர் மோடியும் நானும் எங்கள் பிரதிநிதிகளுடன் இருதரப்பு பேச்சுக்களை நிறைவு செய்தோம். எங்கள் உறவுகளின் தற்போதைய நிலை குறித்து விரிவாக மீளாய்வு செய்தோம். அத்தோடு எதிர்காலத்தில் அந்நியோன்ய ஆர்வம் செலுத்தும் துறைகளில் எமது ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் பற்றிய கருத்துக்களையும் பரிமாறிக் கொண்டோம்.

குறிப்பாக 2022ல் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின் போது மற்றும் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையின் போது இலங்கைக்கு வழங்கப்பட்ட வலுவான ஆதரவிற்காக பிரதமர் மோடி மற்றும் இந்திய அரசுக்கு நான் நன்றி தெரிவித்தேன்.

இந்தியாவின் அயலுறவுக் கொள்கைக்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# இன்னொரு மொழியைக் கற்பதால் நாம் குறைந்துவிடப்போவதில்லை

## மாறாக வளர்வோம் என்கிறார் வடமாகாண ஆளுநர்





இன்னொரு மொழியைக் கற்பதால் நாம் குறைந்துவிடப்போவதில்லை. மாறாக நாம் வளர்வோம். எமது திறனை - ஆற்றலை வளர்த்துக்கொள்ள இன்னொரு மொழியைக் கற்பது அவசியமானதுஎனவடமாகாணஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.

சூரிய நிறுவகத்தின் ஏற்பாட்டில் இரண்டாம் மொழி சிங்கள கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சுதுமலை குபேரமஹாலில் ஞாயிற்றுக்கிழமைகாலைநடைபெற்றது.

இந்த நிகழ்வில் சூரிய நிறுவகத்தின் ஸ்தாபகரும்முன்னாள்சபாநாயகருமான கரு ஜயசூரியவும் கலந்துகொண்டார். அத்துடன் சுவிற்ஸர்லாந்து தூதரகத்தின் பிரதித் தூதுவர் ஒலிவர் கௌரவ விருந்தினராக பங்கேற்றிருந்தார்.

மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கிய பின்னர் உரையாற்றிய ஆளுநர் -

கிளிநொச்சிமாவட்டச்செயலாளராக தான் பணியாற்றிய காலத்தில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சராக இருந்தவர் கரு ஜயசூரிய. அவர் சிறப்பான தலைமைத்துவத்தை வழங்கிய ஒருவர்.

கரு ஜயசூரியவைப் போன்று நினைவுகூரப்படும் மற்றொருவராக மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர இருக்கின்றார்.

யாழ். மாவட்டச் செயலராக பணியாற்றியபோது நிதி அமைச்சராக இருந்த அவர் பல்வேறு வகைகளிலும் உதவினார்.

இன ஐக்கியத்துக்காகவும் தேசிய ஒருமைப்பாட்டுக்காகவும் சிங்கள மக்கள் தமிழ் மொழியையும், தமிழ் மக்கள் சிங்கள மொழியையும் கற்கும் வகையில் இலவசமாக வகுப்புக்களை நடத்திவரும் சூரிய நிறுவகத்தையும் அதன் நிறுவுநர் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவையும் பாராட்டுகிறேன்.

சிங்கள மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பது இந்த நாட்டில் எங்கும் சென்று சேவையாற்றக்கூடிய வாய்ப்பை உருவாக்கும்.

கூடுதலான மொழியறிவு எங்களை மேம்படுத்த உதவும் என குறிப்பிட்ட ஆளுநர், இதன் ஊடாக ஆய்வுக்கான திறன் உள்ளிட்ட பல்வேறு ஆளுமைகளை வளர்க்க அது உதவும். - என்றார்.

# பொலிஸ் உத்தியோகத்தரைத் தாக்கிய குற்றச்சாட்டில் மூன்று நபர்கள் கைது

தர்மபுரபொலீஸ்பிரிவுக்குஉட்பட்ட ஏ 35 பிரதான வீதி சுண்டி குளம் சந்தி விஸ்வமடு பகுதியில் விசுவமடு பகுதியில் இருந்து பரந்தன் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளை சனிக்கிழமை இரவு வீதி சோதனையில் ஈடுபட்ட பொழுது தலை கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் பயணித்த மூன்று சந்தேக நபர்களை அன்று வீதிச் சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலீசார் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களை சோதனை இடுவதற்கு முற்பட்ட பொழுது மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் தமது கையில் இருந்த கண்ணாடி போத்திலால்தாக்கியுள்ளார் தாக்கியதில் போலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலீஸார் மேற்கொண்ட விசாரணைகள் மூலம் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு மோட்டார் சைக்கிளையும் பொலீஸார் பறிமுதல் செய்துள்ளார்.

இந்தச் சம்பவத்தின் போது கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மற்றும் தடையப் பொருள்கள் அனைத்தும் நேற்று (திங்கட்கிழமை) கிளிநொச்சி நீதிமன்றம் முற்படுத்தப்பட்டதாக தர்மபுரம் பொலீஸ் நிலைய பொறுப்பு அதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்துள்ளார்.

(113)

# யாழில் 15 இலட்சம் ரூபா பெறுமதியிலான மரப்பலகைகளை கடத்திய இருவர் கைது



யாழ்ப்பாணத்துக்குசட்டவிரோதமான முறையில் 15 இலட்ச ரூபா பெறுமதியான மரப் பலகைகளை கடத்தி வந்த இருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மல்லாவி பகுதியில் இருந்து டிப்பர் வாகனத்தில் அனுமதியின்றி மரப் பலகைகளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் சென்றபோது, சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் டிப்பர் வாகனமொன்றை வழிமறித்து பலகைகளை மீட்டுள்ளனர்.

அதனையடுத்து டிப்பர் வாகனத்தைக்கைப்பற்றியபொலிஸார் அதில் பயணித்த இருவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், அவர்களை நீதிமன்றில் முற்படுத்தநடவடிக்கைஎடுத்துள்ளனர்.

# ஹிஸ்புல்லாஹ் எம்.பிக்கு கௌரவம்



சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றதற்காக கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநரும், நாடாளுமன்றஉறுப்பினருமான கலாநிதி எம்.எல்.எம்.ஏ. ஹிஸ்புல்லாவைக் கௌரவிக்கும் நிகழ்வு சனிக்கிழமை காத்தான்குடி பள்ளிவாசல் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தில் இடம்பெற்றது.

காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம்நிறுவனங்களின்சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஏ.எம்.எம். தௌபீக் தலைமையில் சம்மேளனத்தின் மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டமைக்கு பொன்னாடை போற்றி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு இதன்போது இடம்பெற்றது. இந் நிகழ்வில் காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம்நிறுவனங்களின்சம்மேளனத்தின் பிரதிநிதிகள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் பிரமுகர்கள், உலமாக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.







## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


# புதிய சிந்தனைகளின் அவசியம்

இலங்கை அசுத் தலைவரின் இந்தியப் பயணத்தில் எதிர்பார்க்கப்பட்டபடியே தமிழர்களின் பிரச்சினை தொடர்பான எந்த முன்னேற்றகரமான அடைவுகளும் இருக்கவில்லை. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத்தருணத்திலாவது இலங்கையில் ஒருசுூட்டாட்சியை (சமஷ்டி) ஏற்படுத்துவதற்கான அழுத்தத்தை புதுடில்லி வழங்கும் என்கிற தமிழ்களின் எதிர்பார்ப்பு, அவ்களின் கோரிக்கை எதற்கும் மதிப்பளிக்கப்படவில்லை.

வழக்கம் போலவே தமிழ்களின் அபிலாஷைகளை இலங்கை ஆளும்தப்பு நிறைவேற்றும் என்று நினைக்கின்றோம், அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்தி மாகாண சபைத் தேர்தலை நடத்துவது என்ற தனது உறுதிமொழியை ஆளும்தப்பு நிறைவேற்றவேண்டும் என்று ஒ-ரு கடமைக்காகச் சொல்லும் வாசகங்களைத் தாண்டி இந்தியா உதிரியாகக்கூட ஒரு வார்த்தையை உதிர்க்கவில்லை.

அதுபோன்றே இந்தியாவின் கருத்து தமக்கொரு அழுத்தவோ வற்புறுத்தலோ கிடையாது, அது கடமைக்கான வெற்றுச் சொற்கள் என்பதைத் தாண்டி வேறொன்றுமில்லை என்பதை உணர்த்துவதைப் போன்று இலங்கை அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க அரசியல் தீர்வு குறித்தோ, மாகாண சபைகள் குறித்தோ ஒரு வார்த்தையைக்கூட கூட்டறிக்கையில் தெரிவிக்கவேயில்லை.

நான் அடிப்பதைப் போல நடிப்பேன் நீ அழுவதைப் போல நடி என்கிறதைப் போன்ற பாசாங்குகூட இல்லாத, இரு நாடுகளுக்கும் இடையிலான நேர்த்தியான இந்த அயலுறவுக் கொள்கையே கடந்த மூன்று தசாப்தங்களுக்கும்மேலாகத் தொடர்கின்றது. ஆனாலும் இந்தியா இந்திரா காந்தி காலத்து நாடாக மாறி ஈழத் தமிழர்களுக்காகக் குரல்கொடுக்கும் என்ற நம்பிக்கையும், இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஈழத் தமிழர்களை இந்தியா பாதுகாக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் நம்மிடையே காணப்படுகின்றது.

இரு நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர உறவில் அத்தகைய தார்மீக எதிர்பார்ப்புக்களுக்கும் பொறுப்புக்களுக்கும் இடமேயில்லை என்பதை மீண்டும் ஒரு தடவை நிரூபித்திருக்கின்றது அநுர – மோடி சந்திப்பும் அதன் பின்னரான கூட்டறிக்கையும். ஈழத் தமிழர் பிரச்சினை என்பது இலங்கையின் உள்நாட்டு விவகாரம் அதிலிருந்து இந்தியாவை எட்டி விலக்கியோ வைப்பது என்கிற கொழும்பின் கடந்த கால அணுகுமுறையிலிருந்து அநுரவும் கிஞ்சித்தும் நகரவில்லை என்பதையும் இந்த இந்தியப் பயணம் நிரூபித்திருக்கின்றது.

இந்தியப்பாதுகாப்பு நலன்களுக்காக இருந்தாலும்கூட ஈழத் தமிழர்களைவிடவும் கொழும்பே புதுடில்லிக்கு மிக முக்கியமானது என்பது தெரிந்தும் புரிந்தும் இருந்தாலும் இந்தியாவை முன்வைத்து தமிழ் அரசியல்வாதிகள், அதிலும் தமிழ் தேசியம் பேசும் அரசியல்வாதிகள் தமிழ் மக்களை ஏமாற்றிவருதே இந்தியா மீதான தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கும் காரணமாகும். இந்த எல்லையிலிருந்து அரசியல் தலைவர்கள் கடக்காத வரையில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிட்டாது என்பதே நிதர்சனம்.

இந்தியா, இந்தியா என்கிற நிலையிலிருந்து தமிழ் அரசியல்வாதிகள் நகர்ந்து புதிய வாய்ப்புக்களையும் சிந்தனைகளையும் தேடாத வரையில் தேங்கி நிற்கும் ஈழத் தமிழ் அரசியலுக்கு புதிய முன்னகர்வுகள் கிடைக்கப்போவதில்லை என்பதே யதார்த்தம்.

# நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கில் உண்மையில் தோற்றவர்கள் யார்?

**ந.சதாசிவ ஐயர்**

தேர்தல் முடிந்துவிட்டது. மீண்டும் வடக்கின் கட்சிகள் தலைகள் என்று சொல்லிக்கொள்பவர்கள் மைக்கைப் பிடிக்கத் தொடங்கிவிட்டனர். பழைய குருடி கதவைத் திறவடி என்று ஒற்றுமை பற்றிக் குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டனர். ஒற்றுமையின் நோக்கமே மக்களுக்கானதல்ல அடுத்துவரும் தேர்தல்களின் கதிரைகளுக்காகத்தான். வைத்தால் குடுமி அடித்தால் மொட்டை என நின்றவர்கள்கூட பச்சை மண்ணையும் சுட்டமண்ணையும் ஒட்டவேண்டும் எனக் கனாக் காணவும் தமக்குத்தாமே தலைப்பாகைகட்டவும் தொடங்கிவிட்டனர். தேர்தலின் முன்பு விட்டேனா பார் என்று விண்ணதிரக் கத்தியோர் கதையெல்லாம் காற்றில் பஞ்சாகிப் பறந்தன.

பிரிந்து நின்றதால்தான் வடக்கில் தமிழ் அரசுக்குத் தோல்வியாம். ஒற்றுமையின்மையால்தான் சுமந்திரன் தோற்றாராம். அரசியல் ஆய்வாளர்கள் பத்தி எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள். ஊடகத் தலையங்கங்கள் இன்னோரன்ன என்று பல........ அப்பப்பா! பார்த்துப் பார்த்துக் கண்கள் வீங்கிவிட்டன. கேட்டுக் கேட்டுக் காதுகள் புளித்துவிட்டன. எல்லோரும் தமது இயலாமையை தேல்வி மனப்பான்மையை வெளிப்படுத்துவதில் ஆர்வமாக உள்ளார்களே தவிர, கனவிலும் இன்னும் சுமந்திரனை



மறக்கமுடியாமல் திணறுகிறார்களே தவிர, மேலும் தமிழ் அரசை எப்படிக் கிழித்துத் தொங்கவிடலாம் என உளறுகிறார்களே தவிர உண்மைப் பார்க்கத் தவறுகிறார்கள்.

தேர்தல் புள்ளிவிபரங்களை ஆராய்ந்து உண்மையை யதார்த்தத்தை வெளிச்சொல்வார் யாருமில்லை. கிழக்கு மக்களைப் பற்றி அவர்களின் காலத்துக்கேற்ற தீரப்பைப் பற்றிக் கதைப்பார் யாருமில்லை.

தமிழரசு தோற்று விட்டதா இல்லையே! இன்று மூன்றாவது பெருங்கட்சியாக எட்டு ஆசனங்களுடன் இருப்பது தமிழ் அரசுக் கட்சிதானே! வடக்கில் பிரிந்துநின்று போட்டியிட்ட கட்சிகள் அமைப்புக்கள் கிழக்கிலும் அவ்வாறுதானே நின்றன. வடக்கிலும் பலமான ஒட்டுக்குழுக்கள் கிழக்கிலும் பலமான ஒட்டுக்குழுக்கள் வடக்கிலும் பல சுயேச்சைகள் கிழக்கிலும் பல சுயேச்சைகள். வடக்கிலும் தமிழ் அரசுக்குள் புதிய முகங்களும் சலசலப்புக்களும் கிழக்கிலும் தமிழ் அரசுக்குள் புதிய முகங்களும் சலசலப்புகளும். ஆனால் கிழக்கு மக்கள் அசைந்து கொடுக்கவில்லை.

எது எப்படியிருப்பினும் ஒரு பாரம்பரிய பெயர்சொல்லும் கட்சி நாடாளுமன்றத்தில் தனிப்பெரும்பான்மையையுடன் பேசக்கூடியதும் தேவைக்கேற்ப இணைந்தும் இசைந்தும் எதிர்த்தும் நிற்கக்கூடியதும் தமிழர்கள் ஒற்றுமையாக ஒரே அணியில் நிற்கிறார்கள் என்பதை இந்தியாவுக்கும் சர்வதேசத்துக்கும் காட்டவும் எமக்கு தேவை என்பதை கிழக்கு மக்கள் நன்றாக உணர்ந்திருந்தனர். கட்சிக்குள் ஜனநாயக ரீதியான குழப்பங்கள் வருவது இயல்பு. அது கட்சியைப் பாதிக்காது என வடக்கில் உள்ளவர்களிலும் ஓரளவானோர் சிந்தித்தனர். கிழக்கில் ஐந்து சூரியன்கள் உதிக்கவும் வடக்கிற்கும் இரண்டுடன் மேலதிகமாக ஒன்று கிடைக்கவும் விழிப்புணர்வுடன் வாக்களித்தனர்.

அம்பாறையில்கூட தமிழ் அரசைக் குறைசொல்லிக்கொண்டு தமிழ் அரசாவது தப்பிப் பிழைக்கட்டும் என்று ஒதுங்காமல் எல்லாரும் குதித்தனர். ஆனால் அம்பாறை மக்கள் சோரம் போகவில்லை. கடந்த தேர்தலில் தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாது போனபோது தமிழ் அரசு அவர்களை நிமிர்த்திவிட்டதை மறக்காது நன்றிக்கடன் செலுத்தினர்.

ஆனால் வடக்கில் நாம் என்ன செய்தோம்? எல்லோரும் பெரிய அறிவாளிகள், புத்திஜீவிகள், மேதாவிகள் புலம்பெயர் வளம் படைத்தோர். கண்ணை மூடிக்கொண்டு கைபோனபடி புள்ளடியிட்டோம். மேதாவிகள் மேல் தாவிகளானோம். அரசியல் பாரம்பரியமறியாது, முப்பது வருட வேதனையறியாது, மூன்று இனக்கலவரம் அறியாது, பிஞ்சில் பழுத்ததுகளாய் ஆனோம். எப்படி வாக்களிப்பது உசிதம்? ஒரேகட்சிக்கு வாக்களிப்போம் என பத்தி பத்தியாக எழுதினோம் சொன்னோம். யார் கேட்டார்கள்!

சுமந்திரன் முகம் தெரியாதவர்களை நிறுத்தினாராம் பழையவர்களை அனுபவமானவர்களை நிறுத்தவில்லையாம். இதுதான் இப்போ எல்லோரதும் புலம்பல். ஆனால் அவரால் நிராகரிக்கப்பட்டவர்கள் என்று சொல்லிக்கொண்டவர்களும் ஓரிரவில் மறுமணம் செய்தவர்களும் உங்களுக்கு தனிப்பட்ட முறையில் வேண்டப்பட்டவர்களும் மக்கள் யாவருக்கும் அறிமுகமானவர்களும் களத்தில்தானே

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# நாடாளுமன்றத்.....

4ம் பக்கத் தொடர்ச்சி...........

நின்றார்கள். ஆனால் அத்தனைபேரையும் தூக்கியெறிந்தீர்களே! அதற்கு என்ன விளக்கம் சொல்வீர்கள்.

வீடுதான் எங்கள் அசையாச் சொத்து எனக் காலம் காலமாக மனதில் படிந்தோர் தவிர மற்றவர்கள் என்ன செய்தீர்கள்? நீங்கள் புள்ளடியிட்டு தெரிவானவர்கள் யார் யாரோ? மறுபுறத்தில் சுமந்திரன் எங்கே தோற்றார்? அவர் தோற்கவில்லை. இரட்டைக்குழல் துப்பாக்கியின் அருமை தெரிந்து மதிப்பளித்த கிழக்கு மக்கள் போல் சிந்திக்கத் தெரியாதவர்களால் ஆசனமிழந்தார். அவ்வளவுதானே! அவர் ஏனையவர்களைப்போல் தமிழ் அரசுக் கட்சியை விட்டு ஓடவுமில்லை ஒதுங்கவுமில்லை. ஒதுங்கவேண்டிய தேவையுமில்லை. தேசியப் பட்டியலை அவர் வேண்டாமென்றதற்கும், ஏதேதோ சொல்லி தன்னளவில் திருப்தியடைகிறோம்.

நாடாளுமன்றப் பதவியில்லையே தவிர அவர் அவராக இருக்குமிடத்தில்தான் இருக்கிறார் என்பதும் அவரின் ஆற்றல் எல்லை மிகப் பரந்தது என்பதும் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் அவர் இருக்குமிடத்தில்தான் இருக்கிறார் என்பதும் போகப்போக தெரியும். அப்போது நம் பிழை நம்மை உறுத்தும்.

தற்போது நாடாளுமன்றத்துக்குச் சென்றிருக்கும் தமிழ் அரசுக் கட்சியினரும்கூட காத்திரமானவர்களே. ஒற்றுமையாக இணைந்து இயங்குவர் என்பதும் தமிழ் மக்களின் தலைமைத்துவம் தமக்குரியதுதான் எனத் தெளிவாகப் புரிந்துள்ளனர் என்பதும் அவர்களது தொடக்ககட்ட நடவடிக்கைகளில் இருந்தே புலப்படுத்துகின்றன. காலப்போக்கில் ஆளுங்கட்சியில் இருந்தாலும் தமிழர் பிரச்சினையில் தமிழர்களுக்குத் தீங்குவராமல் தமிழ் அரசுடன் புரிந்துணர்வுடன் நல்லெண்ணத்துடன் வடக்கில் புதிதாகத் தெரிவானவர்கள் சேர்ந்து நிற்கும் காலமும் வரலாம்.

தென்னிலங்கை மக்கள் முகம்கொடுத்த பிரச்சினைகள் வேறு. அவர்கள் பொருளாதாரம், இலஞ்சம், ஊழல், முதலாளித்துவம், அரச நிர்வாக சீர்கேடு என்பவற்றை தீர்க்க யாருமில்லாத அரசியல் அநாதைகளாய் புதியவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்தார்கள். அவ்வளவுதான். இதற்கு நாம் போட்டு மண்டையை உடைத்திருக்கத் தேவையில்லை. இவ்விடயங்களில் தீர்மானிக்கும் சக்தி அவர்கள்தான் அதன் நன்மை தீமைகள் எமக்கும் தாமாகவந்துசேரும். எமது பிரச்சினை வேறு. அதனை கிழக்கிலங்கை மக்கள் உணர்ந்ததுபோல் நாம் உணராமல் தவறு செய்துவிட்டோம். தலைமை என்று



சொல்லிக்கொள்பவர்கள் மீண்டும் எப்படி எங்கே மூக்கை நுளைத்து முன்வரலாம், யாரைத் தாஜா செய்யலாம், யாரின் முதுகிலேறி சவாரி விடலாம், சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தலைமையேற்கலாம், எவரின் தலையில் மிளகாய் அரைக்கலாம், என்றெல்லாம் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர். தமது இருப்பை தக்கவைத்துக்கொள்ள தொடர் பரப்புரைகளிலும் ஈடுபடத் தொடங்கிவிட்டனர்.

இனியென்ன எதிர்வரும் காலங்களிலும் கோட்டைவிடாமல் கிழக்கு மக்கள்போல் சிந்தித்து ஒரு கட்சியை ஆதரித்து நிற்போம் என திடசங்கற்பம் கொள்வோம்.

# முன்பள்ளிக் கலைவிழா

வவுனியா வடக்குக் கல்வி வலத்தின் நெடுங்கேணிக் கோட்டத்திற்கு உட்பட்ட புளியங்குளம் மயில்வாகனம் முன்பள்ளியின் கலைவிழா அண்மையில் புளியங்குளம் ஆரம்ப வித்தியாலய மண்டபத்தில் வெகு சிறப்பாக இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் முரளீதரன் கலந்துகொண்டார். முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் இராஜேஸ்வரன், புளியங்குளம் ஆரம்பப் பாடசாலை அதிபர் சிவராசா, சமூக ஆர்வலர் மோசிபவன், முன்பள்ளி இணைப்பாளர் சாந்தினி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர். மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்வுகளும் வெகு சிறப்பாக இடம்பெற்றன.







## பசறையில் நேற்று திடீர் மண் சரிவு

பசறை மடோல்சிம மதிகஹதென்ன அகிரிய வீதி 25கனுவபிரதேசத்தில்நேற்றிரவு மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் அவ்வீதியின் போக்குவரத்து முற்றாகதடைப்பட்டுள்ளதாக மடோல்சிம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போது பெய்து வரும் கடும் மழையுடன், மடோல்சிம மதிகஹதென்ன அகிரிய வீதி 25 இல் உள்ள கனுவ பகுதியில் வீதியில் பெரும் மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது. மேலும் மண்மேடு விழுந்த இடத்தில் ஆபத்தான பெரிய பாறாங்கல் ஒன்றும் சாலையில் சரிந்து விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியில் சரிந்து வீழ்ந்துள்ள பாரிய மண் மேடுகளை அகற்றுவதில் சிரமம் இருப்பதாகவும் தொடர்ந்து பெய்த மழை வீதி தடைகளை அகற்றும் பணிகளுக்கு இடையூறாக இருந்தது என்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பதுளை நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மடோல்சிம மதிகஹதன அகிரிய வீதிக்குப் பதிலாக லுனுகல பசறை வீதியை மத்திகஹதென்ன அம்பலம் ஊடாக பயன்படுத்துமாறு மடோல்சிமபொலிஸார்வாகன சாரதிகளுக்கு அறிவித்துள்ளனர்.

## வானிலை அறிவிப்பு

தென்கிழக்கு வங்காள விரிகுடாகடற்பரப்பில்நிலவும் கொந்தளிப்பு நிலையானது தொடர்ந்தும் நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலைமையானது மேலும் வலுவடைந்து மேற்கு நோக்கி நகர்ந்து வடமேற்கு திசையில் நகரும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் அறிவிப்புகள் தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் வசிக்கும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் இடைக்கிடையே இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மற் றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் சில பிரதேசங்களிலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிகளவு மழை பெய்யக்கூடும் என கூறப்பட்டுள்ளது.







## அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற 34ஆவது மத்தியஸ்த தின நிகழ்வு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் 34 ஆவது தேசிய மத்தியஸ்த தின நிகழ்வு சிறப்பான முறையில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக்க அபேவிக்கிரம தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. முதலில் பங்கேற்பாளர்களின் பதிவுகள் நடைபெற்றது.

பின்னர் மங்கள விளக்கேற்றல் சர்வமத மௌன பிரார்த்தனை வரவேற்பு நடனம் வரவேற்பு உரை உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற்று கடந்த 25 வருடங்களுக்கு மேலாக மத்தியஸ்த சபையில் கடமையாற்றியவர்கள் தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மத்தியஸ்த சபைகளின் செயற்பாட்டை மேலும் வலுவடையச் செய்யும் நோக்கில் நீதி அமைச்சின் ஆலோசனைக்கு அமைய மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவால் ஒவ்வொரு மாட்டங்களிலும் இந்தநிகழ்வு இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது தவிர அம்பாறை மாவட்டத்துக்கான நிகழ்வில் மத்தியஸ்த சபையின் செயற்பாடுகள் அதன் மூலம் மேற்கொள்ளப்பட் வெற்றிச் செயற்பாடுகள் தொடர்பிலும் அது எதிர்நேக்கும் சவால்கள் தொடர்பிலும் கருத்துரைகளும் அனுபவப்பகிர்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் நீதி அமைச்சின் மாவட்ட பயிற்சி உத்தியோகத்தர்களான சமன்நாரங்குமன மற்றும் எம்.ஐ.எம் ஆஸாத் உட்பட விசேட காணி மத்தியஸ்த சபை மற்றும் ஏனைய மத்திய சபைகளின தவிசாளர்கள்,மத்தியஸ்தர்கள்,அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ,எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## நல்லாட்சிக்கான முன்னணி கொள்கை விளக்க மாநாடு

### கிண்ணியாவில் நடந்தது

(ஹலால்தீன் )

எதிர்வரும் உள்ளூர் ஆட்சி தேர்தல் பற்றியும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் கொள்கை விளக்க மாநாடும் நேற்று (திங்கட்கிழமை) கிண்ணியா நகர சபைபல்நோக்குமண்டபத்தில் நடைபெற்றது.

என். எப் .ஜி. ஜி கட்சியின் தவிசாளர் அப்துல் ரஹ்மான் தலைவியில் நடைபெற்ற இந்நிகழ்வில் கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள் உள்ளூராட்சி உறுப்பினர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அரசாங்கத்தால் தற்போது பல்வேறு குளறுபடி நடைபெற்று வருகின்றன அண்மையில் நடைபெற்ற கல்வி அமைச்சின் முக்கிய நிகழ்வில் ராஜதந்திரிகளைக் காக்க வைத்து கல்வி அமைச்சர் மிக நீண்ட நேரம் வராததால் சீன தூதர் திரும்பிச் சென்ற சம்பவம் நல்ல எடுத்துக்காட்டாகும்.

சீன தூதுவர் மீண்டும் சென்று மீண்டும் வந்தார். இந்த நிகழ்வில் சீனாவை அழைக்கின்ற போது ரிபப்ளிக் சைனா என அழைத்ததும் இந்த விடயம் தாய்வானை குறிப்பதாகும்.

சீனாவை பீப்பிள் ரிபப்ளிக் சைனா என அழைக்க வேண்டும் இது ராஜாசந்திரரீதியில் கருத்து வேறுபாடுகளை உண்டுபண்ணும் விடயமாகும் இவ்வாறு பல விடயங்கள் நடைபெறுகின்றன.

அவர் உள்ளூராட்சி தேர்தல் பற்றியும் கருத்தாடலை மேற்கொண்டு என் எப் ஜி ஜி கட்சிக்கு வாக்களிக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த காலங்களில் முஸ்லிம் பிரதேசங்களில் நன்கு படித்த வேட்பாளர்களை நாடாளுமன்றம் அனுப்ப பட்டியலிட்டு அனுப்பிய போதும் அவர்கள் அதனை நிராகரித்து விட்டு அவர்கள் விரும்பும் ஆள்களை போட்டு நாடாளுமன்றம் வென்றதன்பின் அமைச்சினால் வழங்கும் போது முஸ்லிம் வேட்பாளர்கள் போதிய கல்வித் திறமை அற்றவர்கள் என்று கூறினர்.

நன்கு படித்தவர்களை நிராகரித்துவிட்டு அவர்கள் போட்டவர்களை அவர்களே படித்தவர்கள் இல்லை என கூறுகின்றனர். அப்படி என்றால் படிக்காதவர்களை ஏன் அவர்கள் நியமித்தார்கள் படித்தவர்களைஏன் நிராகரித்தார்கள் என கேள்வி எழுப்பினார்?

நாடாளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகைமை, மின்சார கட்டண குறைப்பு பல விடயங்கள் பற்றியும் கருத்துகளை முன் வைத்தார்.

நிகழ்வில் செயக்குழு உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதத்தையும் வழங்கி வைத்தார்.

## வெளிநாட்டு வேலை என்று ஏமாற்றி கிண்ணியாவில் பெரும் பண மோசடி

### ஒருவர் கைது



கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வெளிநாட்டு வேலை பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்த சந்தேக நபர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் புஹல்வெல்ல பகுதியைச் சேர்ந்த 36 வயதுடையவர் ஆவார்.

இந்த பணமோசடிக்குற்றம் தொடர்பில் ஹக்மன பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த 09 முறைப்பாடுகளை ஹக்மன பொலிஸ் நிலைய அதிகாரிகள் விசாரணை செய்ததையடுத்து, சம்பவத்துடன் தொடர்புடைய நபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் 43 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்துள்ளார் என விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹக்மன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# கடத்தி விற்கப்பட்ட 2 ஓட்டோக்கள் மீட்பு

வவுனியாவில் மயக்க மருந்து கொடுத்து முச்சக்கர வண்டிகளை திருடி விற்பனை செய்த நிலையில் இரு முச்சககர வண்டிகள் மீட்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட குற்ற விசாரணைபபிரிவு பொலிசார் நேற்று தெரிவித்துள்ளனர்.


வவுனியா நகரப் பகுதியில் இருந்து சிவப்பு நிற முச்சக்கர வணடி ஒன்றை வாடகைக்கு அமர்த்திச் சென்று, முச்சக்கர வண்டி சாரதிக்கு மயக்க மருந்தை கொடுத்து அவரை கீழே விழுத்திவிட்டு, குறித்த முச்சக்கர வண்டி கடத்திச் செல்லப்பட்டிருந்தது. இது தொடர்பான முறைப்பாடு பொலிஸாரிடம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

அதுபோன்று, வவுனியா, பூவரசன்குளம்பகுதியில்இருந்து உளுக்குளம் நோக்கி முச்சக்கர வண்டியை வாடகைக்கு அமாத்திச் சென்று சாரதிக்கு மயக்க மருத்து கொடுத்து முச்சக்கர வண்டியைக் கடத்திச் செல்லப்பட்ட சம்பவமும் பதிவாகியிருந்தது.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி அழகியவண்ண தலைமையிலான பொலிஸ் குழு எடுத்த நடவடிக்கையில் இந்தக் கடத்தலுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யபபட்டுள்ளார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வவுனியா நகரப் பகுதியில் கடத்தப்பட்ட முச்சக்கர








வணடிக்கு நீலநிற வர்ண்ட்பூச்சு பூசி வாகன இலக்கத்தகடு மாற்றபபட்டு கெக்கிராவ பகுதியில் நின்ற நிலையில் மீட்கப்பட்டது.

அத்துடன், வவுனியா, பூவரசன்குளம்பகுதியில்இருந்து உளுக்குளம் சென்றபோது கடத்தப்பட்ட பச்சை நிற முச்சக்கர வண்டி 9 இலட்சம் ரூபாய்க்குஇலக்கத்தகடுமாற்றி விற்பனை செய்யபபட்ட நிலையில் சாய்ந்தமருது பகுதியில் மீட்கப்பட்டது. குறித்த இரு சம்பவம் தொடர்பில் கெக்கிராவ பகுதியில் வசித்து வரும் 37 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை

நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதவேவேளை, வாகனங்களை வாடக்கு அமர்த்தி வருவோர் தரும் குடிபானங்களை

அருந்தாது விழிப்புடன் செயற்படுமாறு ஓட்டோசாரதிகளுக்கு வவுனியா மாவட்ட குற்றவிசாரணைப்அறிவுறுத்தல் விடுத்துள்ளனர். (100)

# அத்தியாவசியப் பொருட்களுக்கு விலைக்கட்டுப்பாடு விதிக்கப்படும்

## வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

பல அத்தியாவசிய பொருட்களுக்கு அதிகபட்ச சில்லறைவிலைவிதிக்கப்படும் என வர்த்தகம், வர்த்தகம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

இந்த நாட்டில் நுகர்வோர் பெருமளவில் சுரண்டப்படுகின்றனர், நுகர்வோர் விவகார அதிகார சபை அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்று அமைச்சர் தெரிவித்தார்.

தற்போது பல பொருட்களுக்கான அதிகபட்சசில்லறை விலையை நிர்ணயிக்க நுகர்வோர் அதிகாரசபையின் நுகர்வோர் பேரவை செயற்பட்டு வருகின்றது என்று தெரிவித்த அமைச்சர் வசந்த சமரசிங்க, கூடிய விரைவில் விலை மக்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

40 ரூபாவிற்கு விற்கப்பட வேண்டிய தண்ணீர் போத்தல் 100 ரூபாவிற்கும் 52 ரூபாவிற்குவிற்பனைசெய்யப்படவேண்டிய உப்புப் பொதி 100 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அமைச்சரின் கருத்துப்படி ரொட்டி, குடிதண்ணீர் போத்தல்கள், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உப்பு, பருப்பு, வெங்காயம், உருளைக்கிழங்கு, பல உணவுப் பொருட்கள், அரிசி, கொத்து, பேக்கரி பொருட்கள் மற்றும் பல உணவகத்தயாரிப்புகளுக்கும் விலைக்கட்டுப்பாடு அறிவிக்கப்படவுள்ளது.

## தன் கல்வித் தகுதி பற்றி பொய் பரப்புவோர் குறித்து

# எரிசக்தி அமைச்சர் சிஐடியில் முறையீடு

எரிசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜயக்கொடி தனது கல்வித் தகுதி தொடர்பில் பொய்யான தகவல்களை பரப்பும் நபர்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் நேற்று பிற்பகல்முறைப்பாடுசெய்துள்ளார்.

மேலும் அந்தப் பரப்புரைகளால் தனது நற்பெயருக்கும், அரசுக்கும் பெரும் சேதம் ஏற்படும் என்றும் அந்த புகாரில் கூறியுள்ளார்.

அமைச்சர்பொறியியலாளர் குமார ஜயக்கொடி, பேராதனைப்பல்கலைக்கழகம் தனது பட்டங்களுக்கு வழங்கிய சான்றிதழையும் செய்தியாளர்களிடம் காட்டினார்.

கடந்த சில நாட்களாக அமைச்சர்குமாரஜெயக்கொடி பொறியாளர் இல்லை என்றும் அவர் பட்டப்படிப்பை முடிக்கவில்லை என்றும் சமூக வலைதளங்களில் கடும் பரப்புரை செய்யப்பட்டு வந்தது. இதையடுத்தே அவர் இந்த முறைப்பாட்டைச் செய்திருக்கிறார்.

# மரம் முறிந்து விழுந்து அரச விடுதி சேதம்



வவுனியா, தொடருந்து நிலையத்தின் முன்பாக நின்ற பழமையான மரம் காற்றின் காரணமாக

முறிந்து விழுந்ததில் அரச விடுதி ஒன்றும் வர்த்தகநிலையம் ஒன்றும்

சேதமடைந்துள்ளன. நேற்றுமதியம்இந்தவிபத்து இடம்பெற்றுள்ளது.

வவுனியாவில் மீண்டும் அவ்வப்போது கனமழை பெய்து வருவதுடன், கடும் காற்றும் வீசி

வருகின்றது. மதியம் வீசியகாற்றின் காரணமாக வவுனியா தொடருந்து நிலையம்

முன்பாக நின்ற பழையான பெரும் மரம் ஒன்று முறிந்து விழுந்துள்ளது. முறிந்த மரம் மற்றொரு மரத்தின் மீது விழுந்ததால் அந்த மரமும் முறிந்தது.

இந்த மரங்கள் முறிந்து வீழ்ந்ததில் அருகில் இருந்து அரச விடுதியின் கூரைப் பகுதி

சேதமடைந்தது. வர்த்தக நிலையம் ஒன்றின் கூரை மற்றும் சுவர் பகுதி

என்பன உடைந்து சேதமடைந்துள்ளன. அத்துடன் மின்சார இணைப்பும் வயர்களும் அறுந்தன. இதனால் பல மணி நேரங்களாக அந்தப் பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது.

(100)

# இன்று முதல் பொதுமக்கள் கருத்துக் கேட்பு

மின்சாரக் கட்டணத் திருத்த யோசனைக்கான பொதுமக்களின் கருத்துக்களைப் பெறும் நடவடிக்கை இன்று முதல் ஆரம்பிக்கப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. ஜனவரி 8 வரை கருத்துக்கள் கேட்கப் படவுள்ளன.

இது தொடர்பான கருத்துக்களை, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, 6வதுதளம், இலங்கைவங்கிவர்த்தகக் கோபுரம், கொழும்பு 3 என்ற முகவரி அல்லது info@pucsl.gov.lk என்ற மின்னஞ்சல் ஊடாகவும் பொது மக்கள் அனுப்பலாம் அத்துடன் 0764271030 என்ற வட்ஸ்அப் எண்ணிலும் நீங்கள் கருத்துகளையும்ஆலோசணைகளையும் சமர்ப்பிக்கலாம்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு வருகை தந்தோ அல்லது மாகாண மட்டத்தில் ஒதுக்கப்பட்ட இடங்களுக்குச் சென்றோ கருத்துக்களைச் சமர்ப்பிக்க முடியும் எனவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

புதிய வருடத்தில் முதல் ஆறு மாதங்களுக்கு மின் கட்டணத்தை திருத்தம் செய்யாமல் பராமரிக்க வேண்டும் என மின்சார சபை பரிந்துரைத்திருக்கிறது. குறித்த யோசனையை ஆணைக்குழு மீளாய்வுசெய்வதற்குதீர்மானித்துள்ளது, அதற்கு முன்பாகப் பொதுமக்களின் கருத்துக்களையும்கேட்கவுள்ளது. பொது மக்களின் கருத்துக்களுக்காக முன்மொழிவு அடங்கிய வரைவுகாட்சிப்படுத்தப்படும்.

இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மின்சார கட்டண திருத்த யோசனை தொடர்பான இறுதித் தீர்மானம் எதிர்வரும் ஜனவரி மாதம் 17 ஆம் திகதி அறிவிக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

## அரசியல்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டமைப்பில்இலங்கைக்குவழங்கப்பட்டுள்ள விசேட இடத்திற்கு இணங்க, இலங்கையின் நிலையானபொருளாதாரவளர்ச்சிக்குஇந்தியா முழு அர்ப்பணிப்புடன் இருப்பதாக பிரதமர் மோடி உறுதியளித்தார்.

இரு நாட்டு நாடாளுமன்றங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு மட்டத்திலான அரசியல் உறவுகளை மேலும்வலுப்படுத்துவதன்முக்கியத்துவத்தை பிரதமர் மோடியும் நானும் அடையாளங் கண்டுள்ளோம்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பு மற்றும் முக்கிய துறைகளில் முதலீடுகள் குறித்தும் நாம் ஆராய்ந்தோம்.

பாதுகாப்பு , மின்சக்தி மற்றும் வலுசக்தி, பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி, கல்வி, விவசாயம் மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு பற்றிய கருத்துக்களையும் பரிமாறிக் கொண்டோம்.

நிர்வாகம், சேவைவழங்கல் மற்றும் சமூக நலத் துறைகளை டிஜிட்டல் மயமாக்குவதில் இந்தியா அடைந்துள்ள வெற்றியைப் பாராட்டுகிறேன். இதேபோன்ற பொதுவான டிஜிட்டல் உள்கட்டமைப்பை இலங்கையில் ஏற்படுத்துவதற்குஇந்தியாஆதரவளிக்கும்என்று பிரதமர் மோடி என்னிடம் உறுதியளித்தார்.

இருநாடுகளுக்கும்இடையிலானகலாச்சார உறவுகள் நமது உறவுக்கு வலுவான அடித்தளத்தை வழங்குகின்றன. நபர்களுக்கு இடையிலான வலுவான தொடர்புகளுக்காக இந்த பிணைப்புகளை மேலும் மேம்படுத்தும் நோக்கத்துடன், சுற்றுலாத் துறையில் ஒத்துழைப்பைப் பற்றி நாம் ஆராய்ந்தோம்.

பிராந்திய மற்றும் பலதரப்பு சூழல்களில், உலகளாவிய தெற்கில் ஒரு முன்னணி நாடாக இந்தியாவின் பங்கை நான் பாராட்டினேன். அயோரா அமைப்பின் தலைவர் பதவி இலங்கைக்குக் கிடைப்பதற்கு இந்தியா முழு ஆதரவு அளிக்கும் என்று பிரதமர் மோடி தெரிவித்தார். பிரிக்ஸ் அமைப்பில் அங்கத்துவம் பெறுவதற்கான இலங்கையின் லட்சியத்திற்கு இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவை நான் அவரிடம் கோரினேன்.

விசேட பொருளாதார வலயத்திற்கு அப்பால் கண்ட மட்டத்திலான எல்லைகளுக்கு அப்பால் எல்லைகளை உருவாக்க ஐக்கிய நாடுகள் சபையின் கண்ட எல்லை தொடர்பான ஆணைக்குழுவிற்கு இலங்கை முன்வைத்த கோரிக்கைதொடர்பாகஇருதரப்புதொழில்நுட்ப கலந்துரையாடல்களை மிக விரைவில் கூட்டுவதற்கு பிரதமர்மோடியின்தலையீட்டை நான் கோரினேன்.

அண்மையில் நடைபெற்ற மீன்பிடி தொடர்பான ஆறாவது கூட்டுச் செயற்குழுக் கூட்டத்திற்கு பாராட்டு தெரிவிக்கும் அதேவேளையில், மீன்பிடி பிரச்சினைக்கு நிலையான தீர்வு காண்பதில் கூட்டு அணுகுமுறையின் அவசியத்தையும் நாங்கள் ஆராய்ந்தோம். இரு நாடுகளிலும் தடைசெய்யப்பட்ட முறையில் மீன்பிடிப்பதினால் ஏற்படும் சீர்செய்ய முடியாத சுற்றுச்சூழல் பாதிப்பை உணர்ந்து, அந்த நடைமுறையை நிறுத்தவும், சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும்கண்காணிக்கப்படாத மீன்பிடித்தலை நிறுத்தவும் நடவடிக்கை எடுக்குமாறு நான் கோரிக்கை விடுத்தேன்.

பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு மற்றும் இரட்டை வரி விதிப்பைத் தவிர்ப்பது ஆகிய துறைகளில் இன்று கையெழுத்திடப்பட்ட இருதரப்பு ஒப்பந்தங்கள் தொடர்பில் மகிழ்ச்சியடைகிறேன்.

பரஸ்பர ரீதியில் வசதியான தினமொன்றில் இலங்கைக்கு வருகை தருமாறு பிரதமர் மோடிக்கு அழைப்பு விடுத்தேன்.

இந்தியாவின் பாதுகாப்புக்கும் பிராந்தியத்தின் உறுதிப்பாட்டுக்கும் பாதகமான எந்தவொரு வகையிலும் தனது மண்ணை பயன்படுத்தப்படுவதை இலங்கை அனுமதிக்காது என இந்தியப் பிரதமரிடம் உறுதியளித்தேன்.

எதிர்வரும் சில வருடங்களில் இந்தியாவுடனானஉறவுமேலும்பலமடையும் என்பதில்எனக்குஎந்தசந்தேகமும்கிடையாது. இந்தியாவுடனான ஒத்துழைப்பை தொடர்ந்து முன்னேற்றி விரிவாக்கத்திற்கு இலங்கை மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றேன் - என்றார்.

## இந்தியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுப் பிற்பகல் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான ஹைதராபாத் மாளிகையில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இது தொடர்பில் அரசுத் தலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளதாவது:

இந்தியாவின் அயலுறவுக் கொள்கையில் இலங்கைக்கு விசேடமான இடமுள்ளது என்பதை தாம் நன்கு அறிந்திருக்கிறார் என்று கூட்டுச் செய்தியாளர் சந்திப்பில் அரசுத் தலைவர் நினைவு கூர்ந்தார்.

அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தனதுமுதலாவதுவெளிநாட்டுப்பயணத்திற்காக இந்தியாவைத் தெரிவு செய்தமை தொடர்பில் தாம் மகிழ்ச்சியடைகிறார் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இதன்போது தெரிவித்தார்.

எதிர்கால நோக்குடன் இருநாடுகளுக்கும் இடையிலானதொடர்புகளைபுதியகோணத்தில் கொண்டு செல்லும் வகையில் பௌதீக, டிஜிட்டல் மற்றும் எரிசக்தி ஆகிய பிரதான தூண்களைபலப்படுத்துவதற்காகஇலங்கைக்கு தொழில்நுட்ப ஆதரவை வழங்குவதும், இரு நாடுகளுக்குமிடையேமின்சாரவலையமைப்பு இணைப்புமற்றும்பல்உற்பத்தி, பெற்றோலியக் குழாய் இணைப்பை ஏற்படுத்துவது என்பன குறித்தும் இக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்திய அபிவிருத்தி ஒத்துழைப்பை தொடர்ந்து முன்னெடுக்கும் வகையில், அநுராதபுரம் புகையிரத பாதை சமிக்ஞைக் கட்டமைப்பு மற்றும் காங்கேசன்துறை துறைமுக புனரமைப்பு என்பவற்றுக்கு உதவி வழங்குவது தொடர்பிலும் இதன் போது நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தியக் கல்வி ஒத்துழைப்பின் கீழ் அடுத்த வருடம் முதல் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு மாகாண பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு மாதாந்த புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. அடுத்த ஐந்து வருடங்களில் 1500 இலங்கை அரச ஊழியர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்க இந்தியப் பிரதமர் உடன்பாடு தெரிவித்தார்.

அத்தோடு வீடமைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்திமற்றும்உள்கட்டமைப்புஇலங்கையில் விவசாயத்துறை, பால் உற்பத்தித்துறை மற்றும் கடற்றொழில்துறை முன்னேற்றம் என்பவற்றுக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்கும்.

இந்தியாவின் பாதுகாப்புக்கும் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இலங்கை மண்ணை பயன்படுத்த ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இங்கு தெரிவிதார்.

பாதுகாப்பு ஒத்துழைப்பின் கீழ் கடல்சார் பாதுகாப்பு, பயங்கரவாத ஒழிப்பு, இணையப் பாதுகாப்பு, கடத்தல் மற்றும் திட்டமிடப்பட்ட குற்றங்களுக்கு எதிராகப் போராடுதல், மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் போன்ற விடயங்களில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி பகல்போசன விருந்து வழங்கினார்.

இலங்கைக்கு வருகை தருமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அழைப்பு விடுத்தார் - என்றுள்ளது.

## வவுனியாவிலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக சேர்க்கப்பட்டிருந்தார். எனினும் அவருக்கு காய்ச்சல் சுகமாகாமையால் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு எலி காய்ச்சல் தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதுடன், அவருக்கு அங்கு மேலதிக சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

(100)

## பிணைமுறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் சர்வதேச இறையாண்மைப் பத்திரங்களின் மறுசீரமைப்பு தற்போதுள்ள பத்திரங்களுக்கு புதிய பத்திரங்களை பரிமாறிக்கொள்வதன் மூலம் தொடங்கப்படும் எனவும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்ததோடு, 2024ஆம் ஆண்டு செப்டம்பர் 19 சர்வதேச முதலீட்டாளர் பத்திர நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் இரண்டு உள்ளூர் கடன் வழங்கும் நிறுவனப் பிரதிநிதிகளுடன் செய்து கொள்ளப்பட்ட கொள்கை உடன்படிக்கையின்படி, இலங்கை அதன்தற்போதையபத்திரதாரர்களுக்குநவம்பர் 25, 2024 அன்று புதிய பத்திரங்களுடன் தனது பத்திரங்களை பரிமாறிக்கொள்ள உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டது.

டிசம்பர் 12, சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து ஒப்புதல் பெறப்பட்டதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பான நடவடிக்கைகள் டிசெம்பர் 16 முடிவடையும் என்றும், அது தொடர்பான பத்திரப் பரிமாற்றங்கள் டிசெம்பர் 20 நடைபெறும் என்றும்அந்தஅறிவிப்பில்குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, நிலுவையில் உள்ள டொலர் பில்லியன் 12.55 மதிப்புள்ள பத்திரங்களுக்கு புதிய மதிப்புகள் மற்றும் புதிய கூப்பன் வட்டி விகிதங்கள் கொண்ட புதிய பத்திரங்கள் வழங்கப்படும். கடந்தஓகஸ்ட்மாதம்முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மேற்கொள்ளப்பட்ட அதே ஒப்பந்தமே இந்தக் கடன் ஒப்பந்தமாகும்.

அதில் எதுவும் மாறவில்லை. இதில் பேசப்பட்டிருப்பது பழைய ஒப்பந்தத்தை மாற்றியமைக்காமல், அதன் அமுலாக்கல் திகதிகளுடன் கூடிய திட்டம் மட்டுமே என்று தெரிகிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத்தேர்தலிலும்ரணில்விக்கிரமசிங்கவின் பொருளாதாரவியூகத்திலிருந்துவிலகுவதற்காக தேசிய மக்கள் சக்தி ஆணைக் கோரியதே இங்குள்ள பிரச்சினையாகும்.

மாற்றுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்திற்கு ஆணை வழங்கப்பட்ட போதிலும், தற்போதைய ஆளும்தரப்பு மக்களை ஏமாற்றி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார வியூகத்திலேயே பயணிக்கிறது. இது பொருளாதாரத்திற்கு மிகவும் அழிவுகரமானது. அதற்கான ஒரு எடுத்துக்காட்டு சர்வதேச இறையாண்மை பத்திர ஒப்பந்தம் ஆகும்.

இதேவேளை, சமீபகால வரலாற்றில் மிகவும் சிக்கலான மற்றும் சவாலான இறையாண்மைக் கடன் மறுசீரமைப்பு வெற்றிகரமாக நிறைவடைந்ததாக நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தனது எக்ஸ் கணக்கில் குறிப்பிட்டுள்ளார். நிதி அமைச்சின் அதிகாரிகளும் ஆளும்தரப்பும் மிகவும் சிக்கலான மற்றும் சவாலான பணியை முடித்து இலங்கை மக்களுக்கு மிகவும்நன்மைபயக்கும்உடன்படிக்கையை எட்டுவது பற்றித் தற்பெருமை காட்டுகின்றனர், உண்மையில் இலங்கை ஒரு பெரிய பொறிக்குள் சிக்கியுள்ளது.

சர்வதேச இறையாண்மைப் பத்திரம் வைத்திருப்பவர்களுடன்செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை இலங்கைக்கு மிகவும் பாதகமானது மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களுக்குச் சாதகமானது.

இந்த ஒப்பந்தத்தின்படி, நாம் பெறும் கடன் குறைப்பு மற்றும் நாம் செலுத்த வேண்டிய வட்டி ஆகியவை நமது பொருளாதாரத்துடன் இணைக்கப்படும், மேலும் இது பெரும் பொருளாதார இணைப்பு பிணைமுறி (னிழிஉஷலி சிஉலிஜலிதுதீ ஸிஷ்ஜவள-யலிஜ-வி) என்று அழைக்கப்படுகிறது. அதாவது, 2025, 2026, 2027 ஆகிய மூன்று வருடங்களில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சராசரி மதிப்பு 88.6 பில்லியன் டொலர்களாக இருந்தால், எமக்கு 28 சதவீத கடன் குறைப்பு இருக்கும், மேலும் இந்த எண்ணிக்கை 92 பில்லியன் டொலர்களாக இருந்தால், கடன் குறைப்பு 20 சதவீதமாக இருக்கும். அந்த எண்ணிக்கை 96 பில்லியன் டொலர்கள் என்றால், கடன் குறைப்பு 15 சதவீதமாக குறைக்கப்படும். வட்டிக்கும் இதே நிலைதான், நமது மொத்த தேசிய உற்பத்தி வருமானம் அதிகரித்தால் அதிக வட்டி கொடுக்கவேண்டும். அத்தகைய சூழ்நிலையில், எங்கள் கடன் குறைப்பு 15 சதவீதமாக இருக்கும், மேலும் 2028 வரை 6 சதவீத வருடாந்த வட்டியையும், பின்னர் 2038 வரை 9.75 சதவீதமாகவும் செலுத்தவேண்டும்.

இதன் காரணமாக, நாம் பெறும் கடன் குறைப்பின் குறைந்தபட்சம் 15 சதவீதமாகும். முன்னதாக, அர்ஜென்டினா 2005 இல் 76.8 சதவீத கடன் நிவாரணத்தைப் பெற்றது, ஈக்வடோர் 2009இல் 67.7 சதவீத கடன் நிவாரணத்தைப் பெற்றது, கிரீஸ் 2012இல் 50 சதவீத கடன் நிவாரணத்தைப் பெற்றது, மற்றும் கானா ஒக்டோபர் 2024இல் 37 சதவீதக் கடன் நிவாரணத்தைப் பெற்றது.

ஆனால் இலங்கைக்கு 15 சதவீத கடன் குறைப்பு கிடைத்தாலும் அதுவும் வெறும் மாயையே. என்பிவி (NPV - Net Present Value) தொடர்பான சமன்பாட்டின் மூலமே கடனில் இத்தகைய குறைப்பைப் பெறுகிறோம். ஆனால் அந்த சமன்பாட்டைப் பயன்படுத்தும்போது மூன்றாம் உலக நாடுகள் ஒரு பெரிய தவறைச் செய்கின்றன, உண்மையில் இந்த இணக்கப்பாடு 15 சதவீத கடனைக் குறைக்கவில்லை. பதிலாக நாம் அதிக வட்டி கொடுக்க வேண்டும். முந்தைய ஒப்பந்தங்களின்படி, 2030-க்குள் 16.3 பில்லியன் டொலர் கடனையும், மொத்த வட்டியையும் செலுத்த வேண்டியிருந்தது. அரசாங்கத்தின் புதிய உடன்படிக்கையின் படி 2038 வரை கடனை செலுத்த கால அவகாசம் இருக்கும், ஆனால் அதற்குள் 18.6 பில்லியன் டொலர்களை செலுத்த வேண்டும். அதாவது நமது கடன் சுமை 2.3 பில்லியன் டொலர் அதிகரிக்கும். எப்படியிருந்தாலும், இந்த ஒப்பந்தம் மிகவும் சாதகமற்றது.

இலங்கை மக்கள் பானையில் இருந்து அடுப்பிற்குள் விழும் உடன்படிக்கைக்கே சென்றுள்ள நிலையில், ஆளும்தரப்பு நிதியமைச்சின் ஊடாக அறிவிப்புகளை வெளியிட்டு தவறான சமூகக் கருத்தை உருவாக்க முயற்சிக்கின்றது. மேலும், இன்னும் 15 வருடங்களுக்கு இலங்கையின் பொருளாதாரத்தின்தலைவிதியைதீர்மானிக்கும் இந்த உடன்படிக்கை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்படாமல் செய்யப்பட்டுள்ளது. மேலும், குறைந்தபட்சம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படாமல் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கை ஆளும்தரப்பையும் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தக் கலந்துரையாடல்களில் யார் கலந்துகொண்டார்கள் என்பதுகூட இதுவரை வெளியிடப்படவில்லை. அதன்படி, இந்த முழு செயல்முறையும் வெளிப்படைத்தன்மை இல்லாமல் பொதுமக்களிடமிருந்து மறைக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகரும், இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவருமான துமிந்த ஹலங்கமுவ, ஆளும்தரப்பின் சார்பில் கலந்துரையாடலில் ஈடுபட்டதை உறுதிப்படுத்தியிருந்தார்.

இலங்கைவர்த்தகசம்மேளனத்தில்அங்கம் வகிக்கும் இலங்கை நிறுவனங்களும் 1.8 பில்லியன் டொலர் பெறுமதியான சர்வதேச இறையாண்மை பத்திரங்களை கொள்வனவு செய்துள்ளன. இப்போதும்கூட, சர்வதேச இறையாண்மைப்பத்திரம்வைத்திருப்பவர்கள் யார் என்பதை இலங்கை ஆளும்தரப்பு வெளிப்படுத்தாததால், இந்த மதிப்பு இன்னும் அதிகரிக்கலாம்.

பத்திரங்களின் முதன்மை வாங்குபவர்கள் சந்தையில் குறைந்த ஏலத்தில் விற்றதால், இரண்டாம் நிலை வாங்குபவர் நிறுவனங்கள் அவற்றை வாங்கின. இருப்பினும், கடன் மறுசீரமைப்பு பேச்சின் இருபுறமும் நிதி மூலதனத்தின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கடன் வழங்கும் நிறுவனங்களின்பிரதிநிதிகளேஅமர்ந்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

கடனாளர்களின் பிரதிநிதிகளை ஒரே மேசையின் இருபுறமும் அமரவைத்து, கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு ஆதரவாக ஒப்பந்தங்களை எட்டுவதை, ''சமீபத்திய வரலாற்றில் மிகவும் சிக்கலான மற்றும் சவாலானபணி"என்றும்"மக்களின்தனிச்சிறப்பு வாய்ந்த சாதனை'' என்றும் சித்தரிப்பது சமூகத்தை தவறாக வழிநடத்துவதாக அமைகிறது.

பொய்யான அறிக்கைகளை வெளியிடுவதை விடுத்து, ஆளும்தரப்பு உடனடியாக இச்செயற்பாட்டை இடைநிறுத்தி, இந்தஉடன்படிக்கைகள்பற்றியஉண்மையை சமூகத்திற்கு வெளிப்படுத்தி, அது தொடர்பான முடிவுகளைஎடுக்கும்உரிமையைமக்களுக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறான தவறான கருத்துக்களுக்கு இலங்கை மக்கள் ஏமாற வேண்டாம் என்றும், மக்களின் உரிமைகளுக்காகவும் இலங்கையின் பொருளாதாரத்தின் பாதுகாப்பிற்காகவும் முன்வருமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

## இந்திய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாதகமான சூழல் குறித்து விளக்கமளித்த அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, இலங்கையில் முதலீடு செய்யுமாறு இந்திய தொழில் முனைவோரிடம் கோரிக்கை விடுத்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான முதலீடு மற்றும் வர்த்தக உறவுகளை விரிவுபடுத்தும் நோக்கில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் டிஜிட்டல் பொருளாதாரம், சுற்றுலா, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதன்படி, இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகளின் அடிப்படையில் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளை விரிவாக்குவது குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கவனம் செலுத்த இந்திய முன்னணி வர்த்தகப்பிரதிநிதிகள்விருப்பம்தெரிவித்ததுடன், அதற்குத் தேவையான முதலீட்டு வசதிகளை வழங்க இலங்கை ஆளும்தரப்பு உடன்பாடு தெரிவித்தது.

தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோவும் இந்த சந்திப்பில்கருத்துத்தெரிவித்தார்-என்றுள்ளது.





# காரைதீவில் எலிக் காய்ச்சல் விழிப்புணர்வு சுகாதார வைத்திய அதிகாரி நடவடிக்கை

(நூருல் ஹுதா உமர்)

எலிக்காய்ச்சல் சம்பந்தமாக விவசாயிகளுக்கும், மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் களப்பணி நிகழ்ச்சி காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் தஸ்லிமா வசீர் அவர்களின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது.

இதன்போது மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருவருகிறது. அதன் ஓர் அங்கமாக எலிக்காய்ச்சலுக்கு மனிதர்கள் ஏன் பயப்படவேண்டும். வடமாகாணத்தின் பல பகுதிகளிலும் அதிகரித்த எண்ணிக்கையில் சடுதியான மர்மக் காய்ச்சல் ஒன்று பரவி வருவதாக செய்திகள் அண்மைய நாட்களில் வெளிவந்திருந்தன. இந்த காய்ச்சல் டநிவழளிசைய எனப்படும் ஒரு வகை பக்டீரியா மூலம் பரவுவதால் லெப்டோஸ்பிரோசிஸ் என்று இந்த நோய் அழைக்கப் படுகிறது. கேள்வி அடையாளம் போன்ற வடிவம் கொண்டதன் காரணமாக இவை ளுஹ்ரீசைழஉஜ"யநவய குரூப் என்றும் வகைப்படுத்தப்படுகிறது.

விரைவான, திட்டமிடப் படாத நகரமயமாக்கல் மற்றும் மோசமான சுகாதாரம், அலட்சியம் ஆகியவற்றின் காரணமாக, வளரும் நாடுகளில் கடுமையான காய்ச்சல் ஏற்படுத்தும் நோய்க்கான முக்கியகாரணமாக லெப்டோஸ் பைரோசிஸ் அடையாளம் காணப்பட்டிருக்கிறது. வீட்டு மற்றும் காட்டு விலங்குகள் லெப்டோஸ்பைர்களை எடுத்துச் செல்வதால், அவ்வாறான இடங்களில் வசிக்கும் ஒவ்வொரு நபருக்கும் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது. சுகாதார ஊழியர்கள், கால்நடை பராமரிப்பாளர்கள், விவசாயிகள் மற்றும் பண்ணை தொழிலாளர்கள், மீனவர்கள், கொறித்துண்ணிகளினால் கடிபடுபவர்கள், நீரில் விளையாடுபவர்கள், வெள்ளம் பாதித்த பகுதிகளில் தன்னார்வ மீட்புப் பணிகளில் ஈடுபடுபவர்கள், துப்புரவுப் பணியாளர்கள், கழிவுநீர் தொழிலாளர்கள், இந்த நோயால் அதிகம் பாதிக்கப்பட கூடியவர்களாக இருக்கின்றனர்.

லெப்டோஸ்பைரோசிஸ் பக்டீரியாவினால் பாதிக்கப் பட்ட விலங்குகளின் அதாவது எலிகள், நாய்கள், கால்நடைகளான ஆடு, மாடு, பன்றிகள் மற்றும் வன விலங்குகளின் சிறுநீர் வெள்ள நீர், ஆறு, குளம் போன்ற பெரும் நன்னீர் நிலைகளில் கலப்பதால் இந்த நோய்த்தொற்று ஏற்படுகிறது. இப்படியான அசுத்த நீர் காயங்களில் படுவதால், அந்த நீரில் வாய் கொப்பளிப்பதால் அல்லது குடிப்பதால் மனிதர்களை இந்த நோய் தொற்றிக் கொள்கிறது.

எனவே வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களின் பின்னர், குளம் குட்டைகளில் குளிப்பதை தவிர்த்தல், வெள்ளம் பார்க்க செல்வதை தவிர்த்தல், கொதித்து ஆறிய சுத்தமான நீரை பருகுதல், விவசாய வேலைகளுக்கு பூட்ஸ் சப்பாத்து அணிதல், காலில் உள்ள காயங்களை மூடி பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற் கொள்வதன் மூலமாக இந்த நோய் தொற்றுவதில் இருந்து பாதுகாப்பு பெற முடியும்.

அதிக காய்ச்சல் தலைவலி உடல் வலி கண் மஞ்சளாதல் போன்ற அறிகுறிகள் இருந்தால் தாமதிக்காமல் அருகில் உள்ள வைத்தியசாலைக்கு சென்று வைத்திய ஆலோசனை பெற்றுக் கொள்வது மிகவும் உசிதமானது. அது போல உங்கள் பிரதேசங்களில் எலி காய்ச்சல் பரவினால் இந்த நோய் உங்களுக்குஏற்பாடாமல் இருக்க தடுப்பு மருந்துகளை பெற்றுக் கொள்ள முடியும்.

எலிக்காய்ச்சல் குறித்து தெரிந்து கொள்ள, இலவசமாக தடுப்பு மருந்துகளை பெற்று கொள்ள உங்கள் பிரதேசத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளை அல்லது வைத்தியசாலைகளை நாட முடியும் என காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் அறிவித்தல் வெளியிட்டுள்ளது.



# குருளை சாரணர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு






(றிபாஸ்)

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரண சங்கத்தின் ஏற்பாட்டில்அக். முஹம்மதியா கனிஷ்ட வித்தியாலய குருளைச் சாரணர்களுக்கான சின்னம்சூட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.ஏ.நபுஹர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு அக்கரைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி ஏ.எல். ஜெய்னுடீன் பிரதம அதிதியாகவும் மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ. உதுமாலெப்பை, உதவி ஆணையாளர் எம். எச். ஹம்மாத் ஆகியோர் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

சாரண ஆசிரியை ஜே. அஸ்மியாவின்ஒத்துழைப்புடன் இடம்பெற்ற இச் சாரணர் சின்னம்சூட்டுவிழாவில்சுமார் ஐம்பது குருளைச் சாரணர்கள் கலந்து கொண்டு சின்னங்களை பெற்றுக் கொண்டனர்.

# கல்முனை பாலிகாவுக்கு கிட்டியது ஸ்மார்ட் போர்ட்

(நூருல் ஹுதா உமர்)

தொழில் மற்றும் வெளி நாட்டு வேலைவாய்ப்பு அமைச்சால் அம்பாறையில் இடம்பெற்றநிகழ்வின்போது கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவிகளின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு பயன்பெறும் நோக்கில் ஸ்மார்ட் போர்ட் வழங்கி வைக்கப்பட்டன.

மேற்குறித்த ஸ்மார்ட் போர்ட் சாதனங்கள் மற்றும் ஆவணங்களை உத்தியோகபூர்மாக கல்லூரி முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ்கையாளிக்கும் நிகழ்வு நேற்று அதிபர் காரியாலத்தில் இடம்பெற்றது.

இச்சந்தர்ப்பத்தில் எமது கல்லூரிக்கு ஸ்மார்ட் போர்ட் பெற்றுத்தருவதாகக் அளப்பரிய பங்காற்றிய கல்முனை முன்னாள் பிரதேச செயலாளரும் தற்போதைய கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருமான ஜே.லியாக்கத் அலி அவர்களுக்கு ஆத்மார்த்தமான நன்றிகளையும் வாழ்த்துக்களையும் பாடசாலை சமூகம் சார்பாக தெரிவித்துக் கொள்வதாக பாடசாலை அதிபர் ஏ.பி. நஸ்மியாசனூஸ்தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கல்லூரியின் பிரதி அதிபர், கல்முனை பிரதேச செயலகத்தின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வருமான வரி செலுத்தாதவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை பாயும்

## உள்ளாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் கூறுகிறார்

2023, 2024 மதிப்பீட்டு வருடத்தின் எஞ்சிய வரி பணத்தை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துமாறு உள்ளாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது. குறித்த திகதிக்கு முன்னர் வரி பணம் செலுத்த தவறும் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எந்த நிவாரணமும் வழங்கப்படாது என திணைக்களத்தின் ஆணையாளர் சேபாலிகா சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

இதுவரை செலுத்தாத சுய மதிப்பீட்டு வரி மற்றும் எஞ்சிய வரி பணத்தை அறவிடுவதற்காக கள ஆய்வு மற்றும் உள்நாட்டு இறைவரி கட்டளை சட்டங்களின் பிரகாரம் சட்ட ரீதியில் நடவடிக்கை எடுப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது .அவர்களுக்கு எதிராக 2025 ஜனவரி மாதத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்எனவும்ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன்எஞ்சியவருமான வரி பணம் செலுத்தாத நபர்களுக்கு முன் அறிவிப்பின்றி அவர்களின் வங்கிகணக்குகளில் இருந்து பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு மேலதிகமாக அவர்கள் செலுத்த வேண்டிய மீதமுள்ள வரி பணத்தின் அளவுக்கமைய குற்றவியல் வழக்கு தொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.




# பப்பாசிப் பயிற்செய்கை கனமழையால் பாதிப்பு

## வவுனியா வடக்கு செய்கையாளர் விசனம்

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 21கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 500 விவசாயிகளினுடைய பப்பாசிப் பயிற்செய்கைகள் கன மழை காரணமாக முழுமையாகவும், பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்பாதிக்கப்பட்டவிவசாயிகளின்கோரிக்கைக்கு அமைவாக, பாதிக்கப்பட்ட சிலபப்பாசித்தோட்டங்களை வன்னிமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன், விவசாயிகளுக்குரிய நட்டஈடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய தரப்பினர்களுடன் பேசுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில் -

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட, 21 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த, 500 விவசாயிகளுக்கு, பசுமை அக்ரோபிறைவேட்லிமிட்டட் என்னும் நிறுவனத்தால் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தினூடாக ஒருவிவசாயிக்கு அரை ஏக்கர் வீதம், மொத்தம்250ஏக்கரில்பப்பாசி, மிளாகாய் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கானஉதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயிகளின் பாரிய நிதிச்செலவில் செய்கைபண்ணப்பட்ட பப்பாசிப்பயிற்செய்கைகள் அண்மையில் பெய்த கனமழையால், சில தோட்டங்கள் முழுமையாகவும்,சிலதோட்டங்கள்பகுதியளவிலும்பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக பப்பாசிச் செய்கைகள் அறுவடைக்குத் தயாரானநிலையிலேயே இவ்வாறுபாதிக்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் பாதிக்கப்பட்ட சில விவசாயிகள்



நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முறையிட்டதற்கு அமைவாக அவர், நயினாமடு, மதியாமடு, சன்னாசிபரந்தன் உள்ளிட்ட கிராமங்களில் பாதிக்கப்பட்ட பப்பாசிப்பாசிப் பயிற்செய்கைகளைப் பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் பாதிப்பு நிலைமைகள் தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார்.

அத்தோடு நயினாமடுப் பகுதியில்அமைந்துள்ளபசுமை அக்ரோபிரைவேட் லிமிடெட் அலுவலகத்திற்கும் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் அங்கும் கலந்துரையாடல் நடத்தி பாதிக்கப்பட்ட விவசாயிகளின் விவரங்களைக் கேட்டறிந்துகொண்டதுடன், உரிய தரப்பினருடன் பேசி பாதிக்கப்பட்டுள்ளபப்பாசிச் செய்கையாளர்களுக்குரிய நட்ட ஈடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

# வீட்டு வாகன தரிப்பிடத்தில் கிடந்த 12 அடி நீளமுடைய மலைப்பாம்பு

## பாணந்துறை காட்டில் விடப்பட்டது

பாணந்துறை - வடக்கு பாணந்துறை, கோரகபால பிரதேசத்தில் வீடொன்றின் வாகனத் தரிப்பிடத்தில் இருந்து 12 அடி நீளமுடைய மலைப்பாம்பு ஒன்று பாணந்துறை வடக்கு பொலிஸாரால் பிடிக்கப்பட்டு பொல்கொடவனப்பகுதியில் விடப்பட்டுள்ளது.

வீடொன்றின் வாகனத் தரிப்பிடத்தில் மலைப்பாம்பு ஒன்று இருப்பதாக பிரதேச மக்கள் பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மலைப்பாம்பை பாதுகாப்பாகப்பிடித்துள்ளனர்.

பின்னர், பிரதேச மக்களும் பொலிஸாரும் இணைந்து தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையின்அதிகாரிகள்மற்றும்அட்டியவனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளை தொடர்பு கொள்ள முயன் றனர்.

உரிய அதிகாரிகளை தொடர்பு கொள்ள முடியாத காரணத்தால் பாணந்துறை வடக்கு பொலிஸார் இந்த மலைப்பாம்பைபொல்கொடவனப்பகுதியில் பாதுகாப்பாக விட்டதாகபொலிஸார்மேலும் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்வு

## தோட்டப்புறங்களில் பிரிட்டோ நிறுவனம் முன்னெடுப்பு

(கிஷாந்தன்)

பெண்களுக்கு எதிரான மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை ஒழிப்பதற்கான தேசிய செயற்திட்டம் நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகள் கடந்த நவம்பர் 25 ஆம் திகதி முதல் இந்த மாதம் 15 ஆம் திகதி வரை இடம்பெற்றது.

அந்த வகையில் பிரிடோ நிறுவனம் நுவரெலியா மாவட்டத்தில் தோட்டபுற மக்களுக்கு பல்வேறு விழிப்புணர்வு திட்டங்களை முன்னெடுத்த வந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை பிரிடோ நிறுவன நிறைவேற்று பணிப்பாளர் மைக்கல் ஜோக்கிம் தலைமையில், பிரிடோ பெண்கள் வலய அமைப்பின் ஏற்பாட்டில் ஹற்றனில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது, தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலைச்செல்வி கலந்துக்கொண்டார்.

வீட்டில் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளை தடுத்தல் மற்றும் பணியிடத்தில் பெண்க ள் முகங்கொடுக்கும் துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கு இந்தத் திட்டம் ஊடாக பிரயோக ரீதியாக செயற்பட வேண்டும் என இதன்போது கலந்துக் கொண்ட பெண்கள் கருத்துத் தெரிவித்தனர்.












இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.12.2024இல் வெளியிடப்பெற்றது